**கவனிக்க.-** *15.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1838 - 2013 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2013.11.22
*1838 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1584 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1585 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1591 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## மட்டக்களப்பு மேல் நீதிமன்றம்

*பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்தல் - 2013*

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் லொறிகள் பகிரங்க மூடிய விலை மனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2013 ஆண்டு மார்கழி மாதம் 04 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் மேல்நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலைமனு” எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல்நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப் பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக் கோரும் இறுதித் திகதியில் பி.ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையினை முன் வைக்க முடியும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.

மோட்டார் லொறி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாயுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2013 மார்கழி மாதம் 03 ஆம் திகதி அன்று பி. ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | வழக்கு இல. | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்பு கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | லொறி - 01 | TATA 26 ශ්‍රී 3369 | AR 446/ 11 | MC/ BAT/ 01/ 2013 | 1000.00 |
| 02 | லொறி - 01 | L. A. Ley JS-6297 | AR 449/ 11 | MC/ BAT/ 02/ 2013 | 2000.00 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மார்கழி மாதம் 4 ஆந் திகதி அன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற கொள்வனவு குழுவினால் திறக்கப்படும்.

விலைமனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ் வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல்நீதிமன்ற கொள்வனவு குழு பிறப்பிக்கும். இதனடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணிவரைக்கும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு கேள்விப்பத்திர சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லா கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேற்படி மூடிய விலைமனு ஊடான விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவுக்கே உரித்தானதாகும்.

கே. சிவபாதசுந்தரம்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
21.10.2013.

11-678

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அக்குவா மாஸ்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92565
பதிவு முகவரி : இல. 185/2டி, லும்பினி மாவத்தை, கிரிபத்கொடை

ஏ. டி. வீ. லக்மினி,
கம்பனி செயலாளர்.

11-748

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2013, ஒற்றோபர் 15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சதுர்ன் டார் டவுன் அண்டர் (பீவீரீ) எல்ரீடீ
பதிவு இலக்கம் : பீவீ 95023
பதிவு முகவரி : இல. 330 2/12, பழைய சோனகர் வீதி, கொழும்பு 12

கம்பனி செயலாளர்.

11-738

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 543, மாக்கோல வடக்கு, மாக்கோல எனுமிடத்தில் வசிக்கும் காரியவசம் கோவின்னகே தீபவதி பெரேரா ஆகிய நான், கம்பஹா பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஆர். கே. டி. குலரத்ன என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 134 ஆம் இலக்க 2012, மாச்சு 25 ஆந் திகதி மாக்கோல, மாக்கோல வடக்கு காரியவசம் கோவின்னகே லயனல் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்துடன் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கிவிட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

காரியவசம் கோவின்னகே தீபவதி பெரேரா.

11-713/1

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 891/07, ஒபவத்த ஹெய்யந்துடுவயில் வசிக்கும் எதிரிசிங்ஹ ஆரச்சிகே இந்திக பிரசன்ன எதிரிசிங்ஹ மற்றும் சங்கராஜகே சுஜீவ சில்வா ஆகிய நாம், கம்பஹா பிரசித்திபெற்ற நொத்தாரிசு கே. ஏ. குணசேகர என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 3447 ஆம் இலக்க 2008, மே மாதம் 18 ஆந் திகதிடப்பட்டு இலக்கம் 225/1, சியம்பலாபே வடக்கு சியம்பலாபேயில் வசிக்கும் மல்தெனியகே சேனாரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்துடன் இரத்துச்செய்து வலுவிழக்கச்செய்யப்பட்டு விட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்துடன் அறியத்தருகிறோம்.

எதிரிசிங்க ஆரச்சிகே
இந்திக பிரசன்ன எதிரிசிங்ஹ
மற்றும்
சங்கராஜகே சுஜீவ சில்வா.

11-713/2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 102/2சீ, விக்டர் சமரநாயக்க வத்தை, கந்தானவைச் சேர்ந்த தற்சமயம் ஃபிரான்சிஸ்கோ மஸ்ஸி-12ஏ, 00152, ரோம், இத்தாலியில் இருக்கும் ஐவன் பெரேரா டொந்தீனு ஆகிய நான், இல. 70/35, சேர்ச் றோட், கந்தானை, இலங்கையைச் சேர்ந்த நுகேகொடகே டொன் ஃபிராங்க் சரத்சந்திர குணசேகர என்பவருக்கு வழங்கப்பட்டதும் ஜா-எல நொத்தாரிசு எஸ். டபிள்யூ. பிரேமரத்ன என்பவரால் உறுதிப் படுத்தப்பட்டதும், 17591 ஆம் இலக்க 2011, ஓகத்து 25 ஆந் திகதியைக் கொண்டதுமான அற்றோணித் தத்துவம் இன்றிலிருந்து உடனடியாக இரத்துச்செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

இன்று முதல், இதன் பின்னர் நுகேகொடகே டொன் ஃபிராங்க் சரத்சந்திர குணசேகர என்பவரினால் மேற்படி உரிமைத் தத்துவ பயனைக் கொண்டு கையெழுத்திடும் சான்றிதழ்களுக்கும் பிரதிகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

ஐவன் பெரேரா டொந்தீனு.

கொழும்பு,
2013, ஒற்றோபர் 29.

11-698

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

அரியானா இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

அரியானா இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2013, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன்

கம்பனி பதிவு இல. பீவீ 94871 என்றும் அதன் பதிவு அலுவலகம், இல. 6, ப்ளவர் டெரஸ், கொழும்பு 3, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது என்று இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

எம் அன்ட் ஏ கம்பனி செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

11-684

---

## கம்பனி பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட கம்பனி தன்மை மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக குறிப்பிட்ட கம்பனி சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி கம்பனியின் பெயர் மாற்றம் ஏற்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : சன் டான் பீச் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 12903
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 351, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
*கம்பனியின் புதிய பெயர்* : சன் டான் பீச் ரிசோட்ஸ் லிமிட்டெட்

சீ. ஏ. எஸ். கோப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

11-715

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : அடிட்டி இன்பினிட்டி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94986
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.10
*பதிவு முகவரி* : இல. 459/1, கண்டி வீதி, ரண்முத்துகல, கடவத்தை

கோப்பரேட் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ட்ஸ்
அன்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

11-690

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ரொவின் கோ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95001
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.11
*பதிவு முகவரி* : இல. 33/பி, பாடசாலை ஒழுங்கை, நிவாந்திட்டிய, பிலியந்தலை

கம்பனி செயலாளர்.

11-692/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சம்பத் ஹோம்ஸ் அன்ட் புரொப்பெட்டி டெவொலொப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95128
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.22
*பதிவு முகவரி* : இல. 351/பி, பன்னிப்பிட்டிய வீதி, தலுவத்துகொட

கம்பனி செயலாளர்.

11-692/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டில்லிஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95124
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.22
*பதிவு முகவரி* : இல. 33/30, முதலாவது ஒழுங்கை, ரஜமகா விகார வீதி, பிட்டகோட்டே

கம்பனி செயலாளர்.

11-692/3

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கால்டன் பிளான்டேஷன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : இல. 129/3, தவலசிங்காராம றோட், முகத்துவாரம், கொழும்பு 15
*இலக்கம்* : பீவீ 94402
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, செத்தெம்பர் 05

கம்பனி செயலாளர்.

11-699

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2013, செத்தெம்பர் மாதம் 3 ஆந் திகதி பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : கிரிட்கோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94356
*பதிவு அலுவலகம்* : இல. 22/2, ஜெஸ்வெல் பிளேஸ், மிரிஹான, நுகேகொடை

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

லெவல் 4, இல. 2, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

11-711

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2013, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : கொரியா லங்கா ஒட்டோ டெக்னொலஜி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94451
*பதிவு அலுவலகம்* : இல. 40/1, அப்பர் சிங்ஹபிட்டிய வீதி, கம்பளை

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

லெவல் 4, இல. 2, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

11-712

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கிறீன் எனெர்ஜி குளோபல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94987
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.10
*பதிவு முகவரி* : இல. 459/1, கண்டி வீதி, ரண்முத்துகல, கடவத்தை

கோப்பரேட் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ட்ஸ்
அன்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

11-689

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : அல் தணி மினெரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94604
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.09.18
*பதிவு முகவரி* : இல. 71/ஏ, அம்பிலாவத்த வீதி, பொரலெஸ்கமுவ

சார்ட் பிசினெஸ் சிஸ்ரம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

11-764

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : டினோடெக் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 95391
*திகதி* : 05.11.2013
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 172, அளுத்கடை வீதி, கொழும்பு 12

சீ. மெத்திவ் மற்றும் கம்பனி
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

11-772

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் பற்றி பின்வருமாறுஅறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிட்டி கொன்கிறிட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 60790
திகதி : 26, யூலை 2007
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 295, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு 14

கம்பனி செயலாளர்.

11-774

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஈ எப் எஸ் ஃபெசிலிட்டீஸ் சேர்விசெஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 94384
கூட்டிணைப்புத் திகதி : 2013, ஒற்றோபர் 11
பதிவு முகவரி : இல. 216டி, சேரம் இடம், கொழும்பு 10

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

11-667

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பமுணுஆரச்சி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 94789
பதிவு முகவரி : இல. 66ஏ, பழைய பாடசாலை வீதி, மீவனபலன, ஹொரணை

பணிப்பாளர்.

11-668

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அவுரோரா போ வெல்ஸ் (தனியார்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 93547
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 12.07.2013
முகவரி : இல. 10, குருநாகல் வீதி, புத்தளம்

எம். எச். எம். பஸ்லுர் ரஹ்மான்,
கம்பனி செயலாளர்.

11-670

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜிகா ரிசோசர்ஸ் புரமோட்டர்ஸ் (தனியார்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 87674
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 15.08.2012
முகவரி : இல. 52, 2 ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்

எம். எச். எம். பஸ்லுர் ரஹ்மான்,
கம்பனி செயலாளர்.

11-671

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனி பெயர் : புளூ ஹொரைசன் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 94434
கூட்டிணைப்புத் திகதி : 2013.09.06
பதிவு முகவரி : இல. 14-02, எளிபேங்க் டவர், கொழும்பு 6

கம்பனி செயலாளர்.

11-676

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2013, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : சிலோன் பங்களோவ்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94993
*பதிவு அலுவலகம்* : இல. 153, நாவலை வீதி, நாராஹேன்பிட்டிய. கொழும்பு 5

ஜயம்பத்தி மொல்லிகொட,
பதிவுசெய்யப்பட்ட கம்பனி செயலாளர்கள்.

இல. 42, தேவால வீதி,
அலகேஷ்வர வீதி அப்பால்,
எதுல் கோட்டே,
2013, நவெம்பர் 01.

11-796

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கம்பனி கூட்டிணைக்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பியேடேன்டல் லேபோரடொரி (தனியார்) நிறுவனம்
*கம்பனி இலக்கம்* : பீவீ 86528
*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2012, ஆனி 14
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இலக்கம் 408/டி, ஹைலெவல் வீதி, பன்னிபிட்டிய

எல். ஜீ. ஜீவக பிரதீப்,
செயலாளர்.

11-776

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ புரப்பர்ட்டி இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 3855
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ புரப்பர்ட்டி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

(திருமதி) சீ. எஸ். இம்மேனுவல்,
கம்பனி செயலாளர்.

2013, ஒற்றோபர் 28.

11-775/1

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ ரியேலிட்டி லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 3854
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ ரியேலிட்டி (பிறைவேட்) லிமிட்டெட்

(திருமதி) சீ. எஸ். இம்மேனுவல்,
கம்பனி செயலாளர்.

2013, ஒற்றோபர் 28.

11-775/2

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ எசெட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 3850
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ எசெட் (பிறைவேட்) லிமிட்டெட்

(திருமதி) சீ. எஸ். இம்மேனுவல்,
கம்பனி செயலாளர்.

2013, ஒற்றோபர் 28.

11-775/3

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ சேர்விசெஸ் லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 3821
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

(திருமதி) சீ. எஸ். இம்மேனுவல்,
கம்பனி செயலாளர்.

2013, ஒற்றோபர் 28.

11-775/4

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ லேண்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 3851
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*அந்தஸ்து மாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து கம்பனியின் பெயர்* : எல்ஓஎல்சீ லேண்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

(திருமதி) சீ. எஸ். இம்மேனுவல்,
கம்பனி செயலாளர்.

2013, ஒற்றோபர் 28.

11-775/5

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*நிறுவனத்தின் பெயர்* : புதிய ஃபேஷன் எல். கே. (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் இலக்கம்* : பீவீ 95248
*கூட்டிணைத்தல் திகதி* : 29.10.2013
*பதிவு முகவரி* : இல. 3, நிலையம் கிராஸ் றோட், களுத்துறை தெற்கு

கம்பனி செயலாளர்.

11-805

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழாக பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஸத்தி இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94251
*பதிவுசெய்த திகதி* : 2013, ஒகத்து 28
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம்* : லெவல் 6, ''பார்க் வே கட்டிடம்'', லெவல் 48, பார்க் வீதி, கொழும்பு 2

பணிப்பாளர்.

11-814/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பாக பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-

(1) *கம்பனியின் பெயர்* : அன்னபூரணி
(2) *கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 24.10.2013
(3) *பதிவு இலக்கம்* : ஜீஏ 2879
(4) *பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 74/1-5/1, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு 6

(திருமதி) சந்திரவதனி வாசவன்,
கம்பனி செயலாளர்.

11-802

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிரண்ட் ஹோம்ஸ் அன்ட் கொன்ஸ்டிராக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம் : பீவீ 67835*
*கூட்டிணைப்புத் திகதி : 2009.05.18*
*பதிவு முகவரி :* இல. 402A, நீர்கொழும்பு வீதி, கந்தானை.
*செயலாளர்கள் :* கெஸ்ட்மென் கோர்பிரேட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட், இல. 371/2, 1/ 1, நீர்கொழும்பு வீதி, வெலிசர.

11-640

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 06, பாமன்கடை வீதி, சொலமன் அவென்யூ, 44/29 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தர்மகுலசிங்கம் (தே.அ.அ. இல. 393281120 V) ஆகிய நான் கொழும்பு, பிரசித்த நொத்தாரிஸ் பி.என். ஜோசப் முன்பாக 2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 20 ஆம் திகதி 101 ஆம் இலக்கத்தில் முடித்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு எனது அற்றோணித் தத்துவகாரராக நியமித்த ஏ9 வீதி, பரந்தன் கெருடாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த அம்பிகைபாகன் நாகேந்திரன் (தே.அ.அ.இல. 383000211 V) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் இருந்து செயலிழக்கச் செய்கிறேன் என்பதை இலங்கை வாழ் பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருவதுடன் எனது அற்றோனித் தத்துவக்காரரால் இன்று தொடக்கம் அவரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

சங்கரப்பிள்ளை தர்மகுலசிங்கம்.

11-641

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* மோமென்டம் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம் : பீவீ 94629*
*கூட்டிணைப்புத் திகதி : 2013.10.10*
*பதிவு முகவரி :* இல. 7/3, பெலவத்தை வீதி, நுகேகொடை

கம்பனி செயலாளர்.

11-692/4

---

## ஏல விற்பனைகள்

### மக்கள் வங்கி-பதுளைக் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 D என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் 2013.12.13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இங்கு கீழ்க்காணும் விபரங்களைக் கொண்ட ஆதனம், ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

#### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம் பதுளைப் பிரிவு ரில்பொல கோரளை, வெதிகுணேயில் அமைந்துள்ள "கொலொன்கஹ ஹேனகும்புர, கொலொன்கஹஹேன கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் M.M.B. திசாநாயக்க என்பவர் தயாரித்த 2002.04.24 ஆந் திகதியைக் கொண்ட 1360 ஆம் இலக்க வரைபில் காட்டப்பட்டு லொட் 1 ஆக அடையாளமிடப்பட்டுள்ள பிரித்தொதுக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட மூன்று றூட் முப்பத்தியாறு தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 3 றூட், 36.8 பே.) பரப்பளவைக் கொண்ட லொட் 1 காணியும், அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் விளைச்சல் உட்பட அனைத்துடனு மாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2010.04.16 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2011.01.10 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனைப் பிரேரணை அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்தை அடைதல்.-** பதுளை நகரத்தின் விஹாரகொட சந்தியிலிருந்து பசறைப் பாதையில் சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் 137 ஆம் கிலோமீட்டர் தூண் அருகில் பாதையின் இடது புறமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணும் முறையில் பணம் செலுத்துதல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% ;
2. உள்ளூராட்சி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய 1% ;
3. ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் (2.5%) ;
4. இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 1,000 ;
5. விற்பனைச் செலவுகளும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அந்தப்பணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும்;
6. கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் இல. 24, R.H. குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள பதுளைப் பிரதேச தலைமை அலுவலகப் பிரதேச முகாமையாளர் அவர்களிடம் செலுத்துதல் வேண்டும். தொலைபேசி இலக்கம் : 055 - 2222165, 055 - 2223068 ; பெக்ஸ்: 055 - 2222361

உரிமை உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% ஆன பணம் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

டப்ளியூ. ஜயதிலக்க (சமாதான நீதவான்),
பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 48/1, கலுகல்பிட்டிய,
பதுளை.
தொலைபேசி இல 055-2230846,072-3438130

11-642

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவும் மற்றும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

**கடன் தொடர்பு இல. 73351969**

திருகோணமலை, அபெயபுர, இல. 216 ஐச் சேர்ந்த திரு. எஸ். ஏ. குணரத்ன மற்றும் திருமதி டபிள்யு. குணரத்ன ஆகியோரின் உரிமையின் கீழ் எஸ். எஸ். என்ரபிறைசஸ் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 27.09.2013 ஆந் திகதி 1830 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 17.09.2013 ஆந் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. T. கருணாரத்ன 12.12.2013 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணைக்குரிய ஆதன விபரம்

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம் நகர மற்றும் நான்கு கடைத்தெருக்கள் பற்றுவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு நகரம் (சிங்களம்) 244A மற்றும் திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவில் திருகோணமலை பட்டின சபை எல்லைக்குள் அன்பு வெளிபுரம் வட்டாரம் இல. 12 அபயபுர வட்டாரம் இல. 11 இல், திருகோணமலை நகரத்தில் அமைந்த கண்டி றோட், அபயபுர வரிமதிப்பிலக்கம் 206A, அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த அநுபந்தம் இல. 10, வெளிக்களத்தாள் இல. 29, F.V.P. 19 இல் துண்டு இல. 892 என அடையாளமிடப்பட்டதும் அரசாங்கக் காணியின் காணித்துண்டு- வடக்கில் : துண்டு இல. 889 உம் ; கிழக்கில் : துண்டு இல. 881 உம் ; தெற்கில் : துண்டு 891 2/2 ; மேற்கில் : துண்டு இல. 891 1/2, 890 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. F. V. P. 19 இன் படி முப்பத்தொன்பது தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ.0றூ.39.3பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் LD/A/02/150 இல் பதிவு செய்யப்பட்டது.

மேலே விபரித்த காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிவஞானசேகரம் மீள் அளவை செய்து தயாரித்த 2003, சனவரி 23 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1448 இல் பின்வருமாறு விபரிக்கப்பட் டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு அன்பு வெளிப்புரத்திலும் திருகோணமலையில் அபயபுரவில் அமைந்த மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1448 இல் விபரித்த துண்டு 892 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு- வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 889 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 881 உம் ; தெற்கில் : கண்டி றோட்டும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டுகள் 891 1/2, மற்றும் 890 ஐயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1448 இன் படி முப்பத்தொன்பது தசம் மூன்று சைபர் (0ஏ. 0றூ. 39.30பே.) பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

பீ. பீ. சேனாதீர,
சிரேட்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்றரக்கிளை,
திருகோணமலை.

11-770

---

## செலான் வங்கி பி எல் சி - பொரளஸ்கமுவ கிளை

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுவதற்கான 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*"கடன் பட்டோர்" என்ற வகையில் பொரளகஸ்கமுவைச் சேர்ந்த பேதுரு மெரன்ஞ்ஞஹே ரன்சித் மற்றும் தெம்மாதுர சிறியானி என்பவர் களுக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த பல்லேபத்துவில் ஹெட்டிகம கிராமத்தில் அமைந்துள்ள "தெல்ஹகாலெண்டே" மற்றும் "அலுபோகஹாவத்த" என்றழைக்கப் படுகின்ற காணி (இது நிலவரைப்பட இல. 603 இன் X இன் உப பிரிவாகும்.) உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எஸ். அழககோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 15.06.1998 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 603 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு X1 அங்கு

காணப்படுகின்ற அனைத்தையும் கொண்டு சகலதும் பிரிக்கப்பட்டு பதினொன்று தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.60பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

வழிஉரிமை அதன் மேலாகவும் அதனூடாகவும்:

மேற்கூறப்பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு X2 (வீதி ஒதுக்கீடாக 2.5 அடி அகலத்தில் பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) (நிலவரைப்பட இல. 603 இல் உப பிரிவான துண்டு X) இது சைபர் தசம் நாலு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 0.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2013 திசெம்பர் 10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- பிலியந்தல நகரத்திலிருந்து மொரட்டுவ வீதி மார்க்கமாக 1.6 கி.மீ. சென்று இடது பக்கமாக உள்ள சென். மைக்கல் வீதியால் திரும்பி சுமார் 800 மீற்றர் சென்று இடது பக்கமாக உள்ள ஹெடிகம யட்டியான வீதியால் திரும்பி 300 மீற்றர் சென்று மீண்டும் இடது பக்கமாக 10 அடி அகலமான வாகனம் செல்லக்கூடிய கிரவல் வீதி மார்க்கமாக 25 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 09.10.2009 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 28.09.2009 ஆந் திகதி "டெயிலி மிரர்" மற்றும் "லங்கா தீப" பத்திரிகைகளையும் 06.10.2009 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10% ;
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ;
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%) ;
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப் படுத்தல் கட்டணம் ரூபா 2000 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலிங்கோ செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்திற்கு பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொ.பே. 2456475, 2456265.

துசித கருணாரத்ன (ச.நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

11-763

---

**ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. – கல்முனை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 20 திசெம்பர், 2013 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

ஆதனம்.- உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். மஹுருப் அவர்களால் தயாரிக்கப்பட்டு 03.08.2010 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 10524 இல் துண்டு இல. 1 என குறிப்பிடப்பட்டதும், கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, கல்முனைப் பிரிவு 7 இல் அமைந்துள்ளதும் துண்டு 10292 ஐக் கொண்டதுமான "வித்தான குளம்" என்ற "குளத்து வளவு பூமி" என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. வடக்கு தெற்காக பதின்மூன்றரை (13 1/2) பாகங்கள் கிழக்கு மேற்காக பத்து (10) பாகங்கள் விஸ்தீரணமுடையது.

சொல்லப்பட்ட காணித்துண்டு, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நேசராஜா அவர்களால் தயாரிக்கப்பட்டு 22.09.2011 ஆந் திகதியிடப்பட்ட இல. எஸ்என்ஆர்/2011/441 ஐக் கொண்ட விவரணம் மற்றும் மீள் நிலஅளவையியற்கமைய இருக்கின்றது. 1078 பேர்ச் விஸ்தீரணமுடையது.

(மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். யூ. ரீ. செயினுடீன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 16 யூலை, 2012 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 12406 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவர்களான ஹசனுல் பாரி பாத்திமா பர்கஸ் மற்றும் அஹமட் லெப்பே அசீஜா என்ற அஹமட் லெப்பே அசீசா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கல்முனை நகரிலிருந்து அக்கரைப்பற்று வீதியில் ஏறக்குறைய 1 1/3 கி. மீ. சென்று "யூஎஸ்எம் ட்ரான்ஸ்போர்ட்" இற்கு எதிரேயுள்ள சாஹிரா கல்லூரி வீதிச் சந்திக்கு சற்று முன்னாலுள்ள தனியார் உட்புகு வீதி வழியே வலப்பக்கம்

திரும்பவும். விற்பனைக்குரிய ஆதனம் வலதுபக்கத்தில் கடைசியாக அமைந்துள்ளது. இதற்கு சுனாமி வீடமைப்புத் திட்டம் வீதியூடாகவும் உட்புகலாம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 17.10.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 25.10.2013 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு தொழில்சார் கட்டணங்கள் ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் "கொழும்பு 10, ரீ. பீ. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க உதவிப் பொது முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661826, 011-2661835.

பியரட்ன முத்துகுமாரண
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் ஏலதாரர்.

இல. 156-1/13, ஹல்ஸ்ரோப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 0777 378441/0714 424478, 0112 337707.
தொலைநகல் இல.: 0112 337707.

11-792

---

### நெஷனல் டிவலப்மென்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

#### பகிரங்க ஏல விற்பனை

கம்பஹா மாவட்டம், திவுலபிட்டிய ஹேன்பிட்டி கெதர கிராமத்தில் அமைந்துள்ள 3 ஏக்கர் 1 றூட் 31.8 பேர்ச் மற்றும் பெறுமதிவாய்ந்த தொழிற்சாலை சூழலில், மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, தூனகஹபற்று, ஹேன்பிட்டி கெதரவில் அமைந்துள்ள தெல்கஹ வத்தை அல்லது தெல்கஹவத்தை பங்குவ என்ற பெயரால் இனங்காணப்படுகின்ற காணியில் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. விஜித கே. பிரியரத்ன அவர்களால் அளவையிட்டு தயாரிக்கப்பட்ட இல. 775 இடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 1 இடப்பட்ட பகுதியும் மற்றும் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. விஜித கே. பிரியரத்ன அவர்களால் அளவையிட்டு தயாரிக்கப்பட்ட இல. 253பி இடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இல. 1 மற்றும் 3 இடப்பட்ட பகுதி மற்றும் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. விதாரண அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இல. 3423 இடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இல. 15/7, 16/7, 17/7 இடப்பட்ட பாதைகளுக்காக ஒதுக்கப்பட்ட வீதி உரிமையோடு இணைந்த இல. 1334 இடப்பட்ட வேறாக்கப்பட்டதன்கீழ் அறவிடப்படவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட டிவூட் புளோரிங் (தனியார்) நிறுவனத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், மேலே குறிப்பிடப்பட்ட வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மீது 2013 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 9 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சொத்துக்கள் இருக்குமிடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2013.11.08 ஆந் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும், 2013.10.24 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**சொத்திற்கு போகும் வழி.**- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியாக ஜா-எல வரை 20 கிலோ மீற்றர் பயணம் செய்து, வலது பக்கமாகத் திரும்பி மினுவாங்கொடை வீதியில் 12 கிலோ மீட்டர் அளவு மினுவாங்கொடை சந்திவரை சென்று கிரியுள்ளக வீதி, 2.4 கிலோ மீட்டர் நில்பனாகொட சந்திவரை முன்னால் சென்று இடதுபுறத்திற்குத் திரும்பி தூனகஹ வீதி, சேனாநாயக்க ஹார்ட்வெயார் களஞ்சியத்திற்கு முன்னர் (இடது பக்கத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையைத் தாண்டி) 3.6 கிலோ மீட்டர் பிரயாணம் செய்து 2 ஆவது கி. மீ. மைல் கல்லுக்கு முன்னர் இடதுபக்கம் திரும்பி கிரவல் பாதைக்குத் திரும்பி 100 மீட்டர் வரை பிரயாணம் செய்து இறுதியில் இடதுபக்கம் திரும்பி 400 மீட்டர் பிரயாணம் செய்தால் இந்த இடத்தை அடைய முடியும்.

ஏல முடிவில் திருப்தியாக ஏலமெடுத்தவரினால் கீழே குறிப்பிடப் பட்ட பணத்தொகையை அவ்வேளையிலேயே ஏல விற்பனையாளருக்கு செலுத்தப்பட வேண்டும் :-

(1) பெற்றுக்கொண்ட முழுத்தொகையும், (2) உள்ளூராட்சி சபைக்கான 1% வீதம் மற்றும் வெட் வரி, (3) ஏல விற்பனையாளரின் கட்டணமாக 2 1/2% வீதமும், (4) சகல விதமான பிரசார, ஏல விற்பனைச் செலவு, (5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக 1,500 ரூபாவும், (6) விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் நொத்தாரிசு கட்டணம் 3,000 ரூபாவும் ஆகும். வாங்கப்பட்ட விலையில் மீதி 90% த்தை ஏல விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

உரித்துக்கான உறுதி மற்றும் ஏனைய சகல ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, இல. 40 இலக்கமிடப்பட்ட இடத்தில் அமைந்துள்ள நெஷனல் டிவலொப்மென்ட் வங்கி பீஎல்சீ இல் சட்ட முகாமையாளரிடம் விபரங்களுக்கு வினவுங்கள். தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பி. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்
மற்றும் அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

11-808

## நெஷனல் டிவலப்மென்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### பகிரங்க ஏல விற்பனை

கம்பஹா மாவட்டம், திவுலபிட்டிய ஹேன்பிட்டி கெதர கிராமத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட டிவூட் புளோரிங் (தனியார்) நிறுவனத்தின் சூழலில் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படும் பெறுமதிவாய்ந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் சேர்மானங்கள்- 4 ஸைட் ப்லேனிங் இயந்திரம், நிப்சோ இயந்திரம், பய்வ் ஸைட் கிரைடிங் இயந்திரம், டபல் என்ட் கடின் அன்ட் சேபிங் இயந்திரம், ஸ்போயின் பூத், சென்டர் 2" அடி இயந்திரம், டச்ட் கலேக்டர் 5 எச்பீ 6 சோடிகள், ஸ்டீம் பொய்லர் (உபயோகிக்கப்பட்ட சோடஸ்ட் தொன் 0.5 இயந்திரம், மல்டிபல் கிரைண்டர் இயந்திரம், பெம்போ இரண்டு சோடி, ஓட்டோமெட்டிக் குலுமிக்சின் பீடிங் என்ட் எப்லயின் இயந்திரம், டிரயர் (பாவிக்கப்பட்ட டெம்போ அல்லது வெஸ்ட் வினைவூட்வுட்ன் பெகிங்) 3 சோடிகள், வெயின் 7 கடர் மோல்டர் இயந்திரம், ஸ்ரோடர் 12*12ரீஅன்ட்ஜீ இயந்திரம், யூவீ செக்டிஸ் இயந்திரம், யூவீ லெகர் இயந்திரம், வுட்கின் மோல்டர் இயந்திரம், விக்டர் சிபரி இயந்திரம், கிம்பிரிக்னேஷன் பிளாஸ்டிக் மோல்டர் இயந்திரம், ரிஸ்டர் ஸ்கிவாரின் இயந்திரம், சென்டின் மாஸ்டர் இயந்திரம், வின்டஸ்டிபரி இயந்திரம், புலோரி மெட் 5 சுட்டர் இயந்திரம், வெட்டும் கத்தி பெரியது (மேல்) பகுதி 6, வெட்டும் கத்தி சிறியது (கீழ்) பகுதி 6, வெட்டும் கத்தி (இடது) பகுதி 6, வெட்டும் கத்தி (வலது) பகுதி 6, 14" ஹய் ஸ்பீட் ரீசீர் வாள் 2, 12" பர்கியூலர் சோ 1, விடிப் கடர் 2, டன்ட் கடர் செகன்ட் 2, கிரடேகடர் செகன்ட் 2, ஸ்டீம் நைப் 2, பிளட்டின் கடர் 4, டங்கடர் 1, குருவே கடர் 1, 10" சோ 4, பேபர் 60#25x60'70 சென்டின் பேப்பர் 80#25x60'70,100 சென்டின் பேப்பர் 120#25x6' சென்டின் பேப்பர் 180#25x6'105 மேலே காட்டப்பட்ட அசையும் ஆதனங்கள் மினுவாங்கொடை, தூனகஹ, ஹேன்பிடிகெதர 279 ஆம் இலக்கமிடப்பட்ட சூழலில் வைக்கப்பட்டு அல்லது பத்திரப் படுத்தப்பட்டு அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட அசையும் ஆதனம் ஒவ்வொன்றாக ஏலத்தில் விடப்படும்.

1336 ஆம் இலக்கமிடப்பட்ட பிணையின்கீழ் அறவிடப்படவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட டிவூட் புளோரிங் (தனியார்) நிறுவனத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், மேலே குறிப்பிடப்பட்ட வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மீது 2013 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 9 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு சொத்துக்கள் இருக்குமிடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2013.11.08 ஆந் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும், 2013.10.24 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**சொத்திற்கு போகும் வழி.**- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியாக ஜா-எல வரை 20 கிலோ மீற்றர் பயணம் செய்து, வலது பக்கமாகத் திரும்பி மினுவாங்கொடை வீதியில் 12 கிலோ மீட்டர் அளவு மினுவாங்கொடை சந்திவரை சென்று கிரியுள்ள வீதி, 2.4 கிலோ மீட்டர் நில்பனாகொட சந்திவரை முன்னால் சென்று இடதுபுறத்திற்குத் திரும்பி தூனகஹ வீதி, சேனாநாயக்க ஹார்ட்வெயார் களஞ்சியத்திற்கு முன்னர் (இடது பக்கத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையைத் தாண்டி) 3.6 கிலோ மீட்டர் பிரயாணம் செய்து 2 ஆவது கி. மீ. மைல் கல்லுக்கு முன்னர் இடதுபக்கம் திரும்பி கிரவல் பாதைக்குத் திரும்பி 100 மீட்டர் வரை பிரயாணம் செய்து இறுதியில் இடதுபக்கம் திரும்பி 400 மீட்டர் பிரயாணம் செய்தால் இந்த இடத்தை அடைய முடியும்.

ஏல முடிவில் திருப்தியாக ஏலமெடுத்தவரினால் கீழே குறிப்பிடப் பட்ட பணத்தொகையை அவ்வேளையிலேயே ஏல விற்பனையாளருக்கு செலுத்தப்பட வேண்டும் :-

(1) பெற்றுக்கொண்ட முழுத்தொகையும், (2) உள்ளூராட்சி சபைக்கான 1% வீதம் மற்றும் வெட் வரி, (3) ஏல விற்பனையாளரின் கட்டணமாக 2 1/2% வீதமும், (4) சகல விதமான பிரசார, ஏல விற்பனைச் செலவு, (5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக 1,500 ரூபாவும், (6) விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் நொத்தாரிசு கட்டணம் 3,000 ரூபாவும் ஆகும்

உரித்துக்கான உறுதி மற்றும் ஏனைய சகல ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக "கொழும்பு 2, நவம் மாவத்தை, இல. 40 இடப்பட்ட இடத்தில் அமைந்துள்ள நெஷனல் டிவலொப்மென்ட் வங்கி பீஎல்சீ இல் சட்ட முகாமையாளரிடம்" விபரங்களுக்கு வினவுங்கள். தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பி. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்
மற்றும் அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

11-809

---

## மக்கள் வங்கி – மாவத்தகமை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டாறான 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்துவ, கந்தஹய கோரலை, எல்லாகொன்ன அரம்பொல என்ற கிராமங்களில் அமைந்துள்ள 'எல்லாகொன்ன வத்தை' என்ற காணிக்கு 2007.02.01 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 207030 ஆம் இலக்க வரைபடத்தின் 1 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடம் உட்பட ங்கள் அனைத்தும் அடங்கலாக.**

**(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 19.70பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் என்னால் 2013.12.10 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2012.12.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2012.12.20 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ள ஏலவிற்பனை அறிவித்தலுக்கு உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- மாவத்தகம நகரத்திலிருந்து பரந்தன பாதையில் 2 3/4 கிலோ மீற்றர் அளவு சென்று பொத்துபோவ சிக்கன கூட்டுறவு வங்கிக்கு அருகால் வலது பக்கமாக உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான கிரவல் பாதையில் 200 மீற்றர் அளவு சென்றவுடன் பாதையின் இடது பக்கமாக இந்தக் காணி அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும் :-

(1) வாங்கிய விலையின் 10% ;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% ;
(3) ஏலவிற்பனை தரகாக விற்பனை விலையின் 2 1/2 % ;
(4) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் குருநாகல் பிரதேச அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 037-2222453, 037-2222572, 037-2231355 ; தொலைநகல் இல. : 037-2225400.

உரிமைப்பத்திரம், வேறு விபரங்களை இல. 210, கொழும்பு வீதி, வெஹெரையில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% க்கான பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் வர்த்தக
கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 071-8125581.

11-797

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. : 0998 1000 4041 - சதார்ன் சன் டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2013.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.07.05 ஆந் திகதிய இலங்கை அரச வர்த்தமானியிலும் 2013.06.28 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான யூ. எஸ். டொலரான தொண்ணூறாயிரத்து நூற்றுப்பதின்மூன்று தசம் எழுபத்தொன்பது சதம் (யூ. எஸ். டொலர் 90,113.79) 2013, மாச்சு 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை யூ. எஸ். டொலரான அறுபத்தேழாயிரத்து தொளாயிரத்துப் பத்து (யூ. எஸ். டொலர் 67,910) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஏழு வீதம் (7%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப் பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2013.12.10 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ராகம் பத்துவை ஜா-எல மற்றும் கந்தானை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் ஏக்கல குருந்துவத்தை மற்றும் கொட்டுகொடையில் அமைந்த "ஓடீஎஸ் காணி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் (எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல 2093 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் உப பிரிவு மற்றும் மீள் அளவீடான) எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 மற்றும் 2004, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் 122 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இங்கமைந்த லொட் 113 ; கிழக்கு : இங்கமைந்த லொட் 121 ; தெற்கு : இங்கமைந்த லொட் R 17 (1 மீற்றர் அகல வடிகாணிற்கான ஒதுக்கம்) ; மேற்கு : இங்கமைந்த லொட் 123, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் சைபர் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 6.01பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 206/120 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட காணிகள் மீதும் அதன் ஊடாகவும் கால் நடையாக செல்லவும் மற்றும் வாகனங்கள் செல்லவும் பொருட்களை ஏற்றுவதற்கும் பொருட்களை இறக்குவதற்குமான மார்க்க உரிமை மற்றும் இக் காணிகள் மீதும் அதன் ஊடாகவும் மேலாகவும் நிலத்தின் கீழாகவும் மின் மற்றும் தொடர்பாடல் நாடாக்கள் நீர் வடிகால்கள் மற்றும் சாக்கடை குழாய்கள் மற்றும் நீர் குழாய்கள் மற்றும் மேலாக செல்லும் வயர்களை இணைத்தல் மற்றும் வேறு இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாண மற்றும் வசதிகளுக்கான உரிமைகளுடனானது.

(அ) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 மற்றும் 2004, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் R5, R16, R18 மற்றும் R17.

(ஆ) (வீ. அ. அ.) வீதிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, நவெம்பர் 05 மற்றும்07 ஆந் திகதியிடப்பட்ட இல. 1877 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் 46

2. கூறப்பட்ட ஏக்கல குருந்துவத்தையில் அமைந்த "ஓடீஎஸ் காணி" என்றழைக்கப்படும் காணிக்கு இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் 131 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இங்கமைந்த லொட் 104 ; கிழக்கு : இங்கமைந்த லொட் 130 ; தெற்கு : இங்கமைந்த லொட் R17 (1 மீற்றர் அகல வடிகாணிற்கான ஒதுக்கம்) ; மேற்கு : இங்கமைந்த லொட் 132. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் சைபர் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 6.01பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங் களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 206/129 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட காணிகள் மீதும் அதன் ஊடாகவும் கால் நடையாக செல்லவும் மற்றும் வாகனங்கள் செல்லவும் பொருட்களை ஏற்றுவதற்கும் பொருட்களை இறக்குவதற்குமான மார்க்க உரிமை மற்றும் இக் காணிகள் மீதும் அதன் ஊடாகவும் மேலாகவும் நிலத்தின் கீழாகவும் மின் மற்றும் தொடர்பாடல் நாடாக்கள் நீர் வடிகால்கள் மற்றும் சாக்கடை குழாய்கள் மற்றும் நீர் குழாய்கள் மற்றும் மேலாக செல்லும் வயர்களை இணைத்தல் மற்றும் வேறு இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாண மற்றும் வசதிகளுக்கான உரிமைகளுடனானது.

(அ) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 மற்றும் 2004, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் R5, R16, R18 மற்றும் R17.

(ஆ) (வீ. அ. அ.) வீதிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, நவெம்பர் 05 மற்றும்07 ஆந் திகதியிடப்பட்ட இல. 1877 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் 4

3. கூறப்பட்ட ஏக்கல குருந்துவத்தையில் அமைந்த "ஓடீஎஸ் காணி" என்றழைக்கப்படும் காணிக்கு இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் 160 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இங்கமைந்த லொட் 151 ; கிழக்கு: இங்கமைந்த லொட் 159 ; தெற்கு : இங்கமைந்த லொட் R20 (1 மீற்றர் அகல வடிகாணிற்கான ஒதுக்கம்) ; மேற்கிற்கு : இங்கமைந்த லொட் 161. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் சைபர் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 6.01பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 189/172 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட காணிகள் மீதும் அதன் ஊடாகவும் கால் நடையாக செல்லவும் மற்றும் வாகனங்கள் செல்லவும் பொருட்களை ஏற்றுவதற்கும் பொருட்களை இறக்குவதற்குமான மார்க்க உரிமை மற்றும் இக் காணிகள் மீதும் அதன் ஊடாகவும் மேலாகவும் நிலத்தின் கீழாகவும் மின் மற்றும் தொடர்பாடல் நாடாக்கள் நீர் வடிகால்கள் மற்றும் சாக்கடை குழாய்கள் மற்றும் நீர் குழாய்கள் மற்றும் மேலாக செல்லும் வயர்களை இணைத்தல் மற்றும் வேறு இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாண மற்றும் வசதிகளுக்கான உரிமைகளுடனானது.

(அ) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 மற்றும் 2004, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் R21, R16 மற்றும் R5.

(ஆ) (வீ. அ. அ.) வீதிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, நவெம்பர் 05 மற்றும் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 1877 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் 4

4. கூறப்பட்ட ஏக்கல குருந்துவத்தையில் அமைந்த "ஓடீஎஸ் காணி" என்றழைக்கப்படும் காணிக்கு இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் 169 எனக் குறிப்பிப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 142 ; கிழக்கு : இங்கமைந்த லொட் 168 ; தெற்கு : இங்கமைந்த லொட் R20 (1 மீற்றர் அகல வடிகாணிற்கான ஒதுக்கம்) ; மேற்கு : இங்கமைந்த லொட் 170. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் சைபர் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 6.01பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங் களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரி யங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 189/273 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட காணிகள் மீதும் அதன் ஊடாகவும் கால் நடையாக செல்லவும் மற்றும் வாகனங்கள் செல்லவும் பொருட்களை ஏற்றுவதற்கும் பொருட்களை இறக்குவதற்குமான மார்க்க உரிமை மற்றும் இக் காணிகள் மீதும் அதன் ஊடாகவும் மேலாகவும் நிலத்தின் கீழாகவும் மின் மற்றும் தொடர்பாடல் நாடாக்கள் நீர் வடிகால்கள் மற்றும் சாக்கடை குழாய்கள் மற்றும் நீர் குழாய்கள் மற்றும் மேலாக செல்லும் வயர்களை இணைத்தல் மற்றும் வேறு இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாண மற்றும் வசதிகளுக்கான உரிமைகளுடனானது.

(அ) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 25 மற்றும் 2004, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2094 எனும் வரைபடத்தில் லொட் R21, R16 மற்றும் R5.

(ஆ) (வீ. அ. அ.) வீதிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, நவெம்பர் 05 மற்றும் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 1877 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் 4.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

11-816/2

### ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – பொரளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**வசிப்பிடத்திற்குப் பொருத்தமான இரு மாடிக் கட்டிடம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குட்பட்ட ராஜகிரிய, ஒபேசேக்கரபுர நாணாயக்கார மாவத்தையினுள் கோதமி கார்டின்ஸில் அமைந்துள்ள துடுவேகும்புர எனும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 02.12.1999 ஆந் திகதிய 4748/1998 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5ஏ எனும் காணித் துண்டும் அதனுள்ளடங்கும் நாணாயக்கார மாவத்தை, வரிப்பண இல. 181ஏ57 மற்றும் 181ஏ57 1/1 சொத்தும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 7.75பேர்ச்சஸ்)**

**ஆதனத்தை வந்தடைதல்.**- பொரளையிலிருந்து டாக்டர் என். எம். பெரேரா மாவத்தையூடாக ராஜகிரியவை நோக்கி கோதமி மாவத்தை வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி அந்த மாவத்தையில் சந்திக்கும் பாலத்தைக் கடந்து அரச மரம் வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி சற்று தூரம் சென்று மீண்டும் இடதுபக்கமாகத் திரும்பி காசன்ஸ் வாடகை வாகன சேவை (Casons Rent a Car Office) அலுவலகம் வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி சற்று தூரம் சென்று வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 15 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

*இவ்வாதனம் வீ 2 ப்ரொபட்டி மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

இவ்வாதனம் 11.12.2013 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 03.05.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 07.05.2013 ஆந் திகதிய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து), (2) பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், (3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை), (4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு, (5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, (6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000. கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேட்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011 - 2661826.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 071- 7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

11-795

---

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : பீ020000001
கடனாளியின் முழுப்பெயர்: ராஜகுரு முதியன்சேலாகே ஜயதிலக்க

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2012.08.10 ஆந் திகதிய 1771 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2012.10.09 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் 2012.10.11 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையிலும் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 220/5, கம்பஹா வீதி, யக்கல என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற ஏல விற்பனையாளர் டப்ளியூ. எம். விக்கிரமரத்ன என்பவரினால் 2013.11.28 ஆந் திகதி பி. ப. 2.30 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அடமானப் பத்திரத்தின் கீழ் இரண்டு கோடியே இருபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 2,25,05,875.43) 2012.04.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட ஆதனப் பிணையின்படி வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில், வங்கிக்கு மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான தொண்ணூற்றைந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 95,00,000) அதற்கான

2012.04.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக ஒரு கோடி முப்பது இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்றெழுபத்தைந்து ரூபா நாற்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 1,30,05,875.43) இதன்படி மொத்தமாக இரண்டு கோடியே இருபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்றெழுபத்தைந்து ரூபா நாற்பத்துமூன்று சதத்தினை (ரூபா 2,25,05,875.43) அறவீடு செய்யவும், மற்றும் ;

2. குறிப்பிட்ட தொண்ணூற்றைந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 95,00,000) அறவீடு செய்ய வேண்டிய 36 வீதமான வருடாந்த வட்டியினை 2012.05.01 ஆந் திகதியிலிருந்து குறித்த சொத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை அறவிடவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்குமாகும்.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், ஹாப்பிட்டிகம் கோரளையில், யட்டிகஹபத்துவவில் திவுலப்பிட்டிய பிரதேச சபை எல்லையில், கொட்டதெனியாவ (முன்னர் எரபத்த) என்ற இடத்தில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த மற்றும் கோன்கஹவத்த'' என்ற காணிக்கு 2005.06.08 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. என். காதர் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11, 12 மற்றும் 13 ஆம் இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகளாக- வடக்கே : எஸ். ஏ. பீ. அப்புஹாமி என்பவருக்குச் சொந்தமான காணி ; கிழக்கே : கே. ஜேம்ஸ் அப்புஹாமி என்பவரின் காணி ; தெற்கே : டி. பீ. டி. திசாநாயக்க என்பவரின் காணியும் ; மேற்கே : கொட்டதெனியாவில் இருந்து மீரிகம வரையிலான பிரதான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒரு ஏக்கர் ஒரு றூட் இருபத்தாறு பேர்ச்சஸ்களாகும். (1ஏ. 1றூ. 26பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும் நீர்கொழும்பு காணிப்பதிவு அலுவலகத்தில் டி 343/115 என்ற தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட காணியினைப் பிரித்து வேறாக்கப்பட்ட 01, 02, 03, 04, 08, 10 மற்றும் 11 ஆம் இலக்க காணித்துண்டுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன. அவை :-

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின் மூலம் பிரித்து வேறாக்கப்பட்ட 2 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கே : 4 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கே : 3 ஆம் இலக்க காணித்துண்டு ; மேற்கே : பாதையும் அமைந்து காணப்படுகிறது. இதன் பரப்பளவு பதினைந்து பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 15பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும்.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின் மூலம் பிரித்து வேறாக்கப்பட்ட 3 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 2 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கே : 4 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டு ; மேற்கே : பாதையும் அமைந்து காணப்படுகிறது. இதன் பரப்பளவு பதினைந்து தசம் ஒரு பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 15.1பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும்.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின் மூலம் பிரித்து வேறாக்கப்பட்ட 4 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கே : 5 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டு ; மேற்கே : 2 ஆம், 3 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினேழு பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 17பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும்.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின் மூலம் பிரித்து வேறாக்கப்பட்ட 10 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கே : 9 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கே : டி. பீ. திசாநாயக்க என்பவரின் காணித்துண்டு ; மேற்கே : 11 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 20பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்தும்.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தின் மூலம் பிரித்து வேறாக்கப்பட்ட 11 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கே : 10 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கே : டி. பீ. திசாநாயக்க என்பவரின் காணித்துண்டு ; மேற்கே : 12 ஆம், 13 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது தசம் ஒன்பது பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 20.9பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம் மற்றும் ஏனைய அனைத்துடன்.

மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணி வரைபடத்தில் 1 மற்றும் 8 ஆம் இலக்க காணித்துண்டுகள் குறிக்கும் பாதைக்கான உரிமையும் காணப்படுகிறது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
08.11.2013.

11-841

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.